முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் பிளஸ்-2 மாணவர்கள் 59 விழுக்காடும் எஸ்.எஸ்.எல்.சி. மாண வர்கள் 57 விழுக்காடும் பெற்றிருக்கிறார்கள். ஆதிதிராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் அக்கரை கொண் டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் மேலும் அந்த மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு வாய்ப்புத் தந்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டுதான் என் போன்றவர்கள் எல்லாம் இன் றைக்கு இந்த ஆதிதிராவிட நலத்துறை மூலமாக பயன்பெற்று ஆதிதிராவிட நலத் துறையில் மாணவர்களுக்கு அதிகச் சலுகை கள் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஸ்காலர்சிப் மற்றும் கடன் வசதிகளும் செய்துகொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜ மன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அனைத்திந்திய ஷெட்யூல் வகுப்பினரின் தலைவர் என்ற முறையில் டாக்டர் அம்பேத்கார் பெயர் சென்னை சட்டக் கல்லூரிக்குச் சூட்டப்பட்டுள்ளது. அதே போல, தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட மக்களின் இனத் தலை வன் என்ற முறையில் மாவீரன் இமானுவேல் பெயரை தாழ்த் தப்பட்ட மக்களின் இரட்சகர் என்று பெயர் பெற்ற அவருடைய பெயரை எங்களது புரட்சித் தலைவி அவர்கள் ஏதாவது ஒரு அரசு கல்லூரிக்கு பெயரிட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும். ஏற்கெனவே சாத்தையாவுக்கும் சொல்லியிருக்கிறேன்.

வினா எண் 139, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு பிற் பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

139 —

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கம்

*11960 —திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1992—93இல் கடன் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீற்பட்டோர் நலம் மற்றும் மீன் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1991 மார்ச் திங்களில் பங்கு மூலதனமாக அரசு மானியம் ரூ. 20,000 வழங்கப்பட்டது. இத்தொகை இச்சங்கத்தின் கடன் பெறும் சக்தியை உச்சக்கடன் அளவை (Maximum borrowing power,) அதிகப்படுத்தும் அளவிலேயே வழங்கப்பட்டது. சங்கம் இவ் வாய்ப்பினைப் பயன்படுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் பெற்று உறுப்பினர் கணக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக சங்கத்தின் தனி அலுவலர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம்) நாகப்பட்டினம் ஆகியோருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் கடன் சங்க உறுப்பினர்களுக்கு நேரடியாகவும் பணமாகவும் வழங்க வாய்ப்பில்லை.

முற்பகல் 11-05

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல மீன்துறை மூலமாக அந்தக் கடன் வழங்கவேண்டுமென்று தான் நானும் கேட்கிறேன். அந்த வகையில் மீன்துறையின் வாயிலாக அந்த மீனவப்பெண்களுக்கு, அந்தச் சங்கத்திற்கு கடன் வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கையெடுத்து—நேரடியாக வழங்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மீன்துறையின் மூலமாக அந்த மீனவப் பெண்கள் சங்கத்திற்கு கடன் வழங்கவேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு கூட நான் கேள்வி கேட்டு நீங்கள் பதில் அளித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதுகுறித்து அதிகாரிகள் இன்னும் விரைவாக நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே விரைவுபடுத்தி அந்தப் பெண்களுக்கு, மீனவப் பெண்களுக்கு கடன் வழங்க மீண்டும் பரிசீலிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுக்மார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களை காக்கிற தெய்வமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய தமிழக முதல்வர், இதயதெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில் தமிழகத்தில் கிட்டத்தட்ட 63 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் வலிமைப்படுத்த வேண்டும், அவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவிகள் செய்ய வேண்டுமென்று நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்

கள். அந்தவகையில் 63 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இலவசமாக கூடைகள் வழங்குவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். அத்தோடு 'பே ஆப் பெங்கால் புராஜெக்ட்' திட்டத்தின்கீழ் அலுமினியம் கண்டெய்னர் வாங்குவதற்கும் உத்தரவிட்டு இருக்கிறார்கள். இதுபோன்ற எண்ணற்ற பயன்களை இன்றைக்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் செய்து வருகிறார்கள்.— அந்த ரீதியிலே கிட்டத்தட்ட பங்குமூலதன உதவியாக மீனவப் பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களை கைதூக்கி விடவேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு அளிக்க உத்தரவிட்டு இருக்கிறார்கள். அப்போது இந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அதற்கு விரைவில் நடவடிக்கையெடுத்து நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்காலத்தில் மீனவர்களுக்கு—என்னுடைய தொகுதியில் 15 பகுதியைச் சார்ந்த மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்களை, செயல் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்த ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இதையும் விரைந்து செய்து, தாய்க்குலத்திற்கு நீங்கள் உதவி அளிப்பீர்களா, உடனடியாக கடன் வழங்கச் செயல்படுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியில் இருக்கும் ஒரு மகளிர் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 63 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. எல்லா சங்கங்களும் சிறப்போடு செயல்பட வேண்டும் என்பதை மனதில் கொண்டு பேசினால் நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கடன் வசதி செய்யவேண்டிய குறிப்புகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை விரிவாக்கும் வகையில் தனியார்கள் முன்வந்தால் அவர்களுக்கு இந்த உதவியை செய்துத் தர அவர்களுக்கு வேண்டிய உதவியை செய்வார்களா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கும் மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்களுக்குதான் உதவி செய்ய வேண்டுமென்று ஒரு கருத்து இருக்கிறது. தனிப்பட்ட நபர்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 140, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

140—

புவனகிரி ஒன்றியம், கஸ்பா ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடி தொழிற்சாலை.

*11148—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) புவனகிரி ஒன்றியம், கஸ்பா ஆலம்பாடி கிராமத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புவனகிரி ஒன்றியம் ஆலம்பாடி கிராமத்தில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை நிறுவிட அரசிடம் திட்ட ஆலோசனை ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

முற்பகல் 11—10

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணாடித் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் திட்டம் இல்லை என்று மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு, அங்கே கண்ணாடித் தொழிற்சாலையை ஆரம்பிக்க அடிக்கல் நாட்டப்பட்டது. அது பின்னர் கைவிடப்பட்டுவிட்டது என்று அறிகிறேன். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் மகளிர் நலனுக்கு முன்னோடித் திட்டங்களை அறிவித்து மகளிர் வாழ்வு மேம்பட அயராது அல்லும் பகலும் பாடுபடும் எங்கள் இதய தெய்வத்தின் ஆட்சியில், அந்தப் பகுதியில் மகளிர் தொழில்பேட்டையாவது ஏற்படுத்தித்தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.